*59*

# எனக்கு ஒரு கதை சொல்லுங்கள்

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #24*

VI. *மூன்றாவது பஸ்காவிலிருந்து இயேசு பெத்தானிக்கு வந்து சேர்ந்தது வரை (தொடர்ச்சி).*

  P. *பெரேயாவில் ஊழியம் (தொடர்ச்சி).*

    *3. இயேசு, பரிசேயர் ஒருவரின் வீட்டிற்கு அழைக்கப்படுதல் - மற்றும் விருந்துகள் பற்றி ஏற்புடைய மூன்று பாடங்கள் (லூக். 14:1-24).*

      a. *தாழ்மையின் பாடம் (லூக். 14:7-11).*

      b. *சுயநலமின்மையின் பாடம் (லூக். 14:12-14).*

      c. *மாபெரும் விருந்து பற்றிய உவமை (லூக். 14:16-24).*

    *4. இயேசு திரளான கூட்டத்தாரால் பின்பற்றப்படுதல் - மற்றும் முக்கியமான ஒரு பாடம் (லூக். 14:25-35).*

    *5. இயேசு, ஆயக்காரர்களாலும் பாவிகளாலும் பின்பற்றப்படுதல் - மற்றும் ஒரு பாடத்தைப் போதிக்க மனதைத் தொடும் மூன்று கதைகள்/உவமைகள் (லூக். 15:1-32).*

      a. *காணாமற் போன ஆடு (லூக். 15:3-7).*

      b. *காணாமற் போன காசு (லூக். 15:8-10).*

      c. *காணாமற் போன மகன் (லூக். 15:11-32).*

    *6. இயேசு தமது சீஷர்களின் துணையுடன் செல்லுதல் - மற்றும் அநீதியான உக்கிராணக்காரன் பற்றிய உவமையிலிருந்து வலிவார்ந்த ஒரு பாடம் (லூக். 16:1-13).*

    *7. இயேசு பரிசேயர்களால் கவனிக்கப் படுதல் - மற்றும் லாசரு, ஐசுவரியவான் "உவமையில்" இருந்து தெளிவான ஒரு பாடம் (லூக். 16:14-31).*

## அறிமுகம்

"எனக்கு ஒரு கதை சொல்லுங்கள்" என்ற வார்த்தைகளைக் கேட்டிராத பெற்றோர் யார் இருக்கின்றார்கள்? எனது மகள்கள் "அப்பா, எங்களுக்கு

ஒரு கதை சொல்லுங்கள்" என்று கேட்டது ஒரு சில நாட்களுக்கு முன்புதான் நடைபெற்றது போல் காணப்படுகிறது. நான் எனது பேத்தி இராகேலுடன் தனித்திருக்கையில், அவள் என் மடியில் அமர்ந்துகொண்டு பின்வருமாறு வேண்டுகோள் விடுப்பாள்: "தாத்தா, எனக்கு ஒரு கதை சொல்லுங்கள்."

நம்மில் பெரும்பாலானவர்கள் கதைகளை விரும்புகின்றோம், அவைகளைக் கூறுவதற்கு இயேசு விரும்பினார். அவரது போதனைகளில் நன்கு நினைவில் நிற்கக்கூடிய மற்றும் நன்கு நேசிக்கக்கூடிய சில போதனைகள் கதை வடிவத்தில் இருந்தன. இந்தக் கதைகளை "உவமைகள்"[1] என்று நாம் அழைக்கின்றோம். "இயேசு கூறியவற்றில் மிகவும் குறிப்பிடத் தக்க சில உவமைகள்"[2] பெரேயாவில் அவரது ஊழியத்தின்போது உரைக்கப்பட்டன.[3] இந்தப் பாடத்தில் உள்ள உவமைகள் தகுந்த நடைமுறைப் பயன்பாட்டுடன் இடையிடையே வைக்கப்பட்டுள்ளன. இந்த உவமைகளில் பெரும்பாலானவையும் மற்ற போதனையும், பரிசேயர் களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எடுத்துரைக்கப் பட்டன (லூக். 14:1; 15:2; 16:14 ஆகிய வசனங்களைக் காணவும்).

இயேசுவால் ஏறக்குறைய எந்த ஒரு தலைப்பையும் எடுத்து அதைப் பற்றி ஒரு கதையை, முக்கியமான செய்தியுடன் கூடிய ஒரு கதையைக் கூற முடிந்தது. இந்தப் பாடத்தில் நாம் அவரை, பெரிய விருந்துகள், ஆடுகள் மற்றும் காசுகள், குடும்ப வாழ்வு, வியாபார நடைமுறைகள், மற்றும் மரணத்திற்குப் பின்புள்ள வாழ்வு பற்றியும்கூட கதைகளைக் கூறுபவராகக் காண்போம்.

## விருந்துகளில் எவ்வாறு நடந்துகொள்வது என்பது பற்றி எனக்கு கதைகளைச் சொல்லுங்கள் (லூக். 14:1-24)

இயேசு, கலிலேயாவில் ஒரு பரிசேயருடனும் (லூக். 7:36-50), யூதேயாவில் ஒரு பரிசேயருடனும் (லூக். 11:37-54) உணவு உண்டிருந்தார். இப்போது அவர் பெரேயாவில் ஒரு பரிசேயருடன் உணவு உண்ணும்படி அழைக்கப்பட்டிருந்தார்[4] (லூக். 14:1, 12அ ஆகிய வசனங்களைக் காணவும்). இப்படிப்பட்ட அழைப்பு விடுக்கப்பட்டு ஏற்கப்பட்டது என்ற வகையில் பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளில் இதுவே மூன்றாவதும் கடைசி யானதுமாக இருந்தது.[5]

பரிசேயர்களின் வீடுகளில் கிறிஸ்துவுக்கு நேர்ந்த முந்திய அனு பவங்களைப் பற்றி நாம் படிக்கும்போது, அவருக்கு விருந்தளித்தவரிடம் இருந்திருக்கக் கூடிய சாத்தியமான நோக்கங்களை நாம் யூகித்தோம். இம்முறை நாம் அவ்வாறு யூகிக்கத் தேவையில்லை. லூக்கா, "ஒரு ஓய்வு நாளிலே பரிசேயரில் தலைவனாகிய ஒருவனுடைய வீட்டிலே அவர் போஜனம் பண்ணும்படிக்குப் போயிருந்தார் ... ஜனங்கள் அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள்" என்று எழுதினார் (லூக். 14:1, 2; லூக் 11:53, 54ஐக் காணவும்). அவர்கள், ஓய்வுநாள் பற்றிய தங்கள் பாரம்பரியத்தை அவர் [இயேசு] மீறுவாரா என்பதைக் காண்பதற்காக "அவர்மேல் நோக்கமா

*யிருந்தார்கள்.''*

*அந்த உணவு வேளையின்போது அங்கு "நீர்க்கோவை வியாதியுள்ள" ஒரு மனிதர் இருந்தார் (லூக். 14:2). ''நீர்க்கோவை'' என்பது உடலில் தண்ணீரை தக்க வைத்துக் கொள்ளும் ஒரு மருத்துவ நிலையாக உள்ளது.[6] இது இரத்தம் கட்டுதலினால் உண்டாகும் மாரடைப்பின் அடையாளங் களில் ஒன்றாக உள்ளது.[7] வியாதியுற்றிருந்த இவரை இயேசு ஓய்வுநாளில் குணமாக்குவாரா என்று பார்ப்பதற்காகவே பரிசேயர்கள் இவரை அங்கு கூட்டிக்கொண்டு வந்திருந்தார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.*

*கிறிஸ்து இந்த மனிதனைக் குணமாக்கினதுமல்லாமல், பின்பு தமது விரோதிகளிடம் ஒரு அறைகூவல் விடுத்து அவர்களைத் திகைக்கச் செய்து, "ஓய்வுநாளிலே சொஸ்தமாக்குகிறது நியாயமா?" என்று கேட்டார் (வ. 3; மாற். 3:4). அவர் இதற்கு முன்பு பயன்படுத்திய அதே விதமான விவாதம் ஒன்றை இங்கும் பயன்படுத்தினார் (மத். 12:11ஐக் காணவும்). அவரது தர்க்கம் ஓய்வுநாளிலே ஒரு குழந்தையையாவது[8] ஒரு மிருகத்தையாவது ஒரு கிணற்றிலிருந்து[9] காப்பாற்றுதல் என்பதன் அடிப்படையில் அமைந்திருந்தது (வ. 5). அவரது விவாதத்தைப் பின்வருமாறு சொல்லாக்கம் செய்யலாம்: ''தண்ணீரில் [கிணற்றில்] இருந்து ஓய்வுநாளில் உங்கள் குழந்தையை வெளியே இழுத்து விடுதல் உங்களுக்குச் சரியானது என்றால், தண்ணீரில் இருந்து [நீர்க்கோவையிலிருந்து] ஓய்வுநாளில் தேவனுடைய பிள்ளைகளில் ஒருவரை விடுவித்தல் எனக்கு ஏன் பொருந்திவராது?" வசனம் 4, "அதற்கு அவர்கள் பேசாமலிருந்தார்கள். அப்பொழுது அவர் அவனை அழைத்து, சொஸ்தமாக்கி அனுப்பி" விட்டார் என்று கூறுகிறது.*

***உண்மையிலேயே தாழ்மையுள்ளவர்களாக இருங்கள் (14:7-11)***

*இந்த வேளையை இயேசு, காலத்திற்கேற்ற பல பாடங்களைப் போதிப் பதற்குப் பயன்படுத்தினார். இவை யாவையும் விருந்துகளைப் பற்றிய அடிப்படையில் அமைந்திருந்தன. விருந்தினர்கள், விருந்து அளிப்பவருக்கு மிக அருகாமையில் இருந்த மதிப்பிற்குரிய இடங்களை நாடுவதை அவர் கவனித்து இருந்தார் (வ. 7; மத். 20:21; 23:6ஐக் காணவும்).[10] மிகவும் தாழ்மையான இடத்தைத் தேர்ந்துகொள்வதில் ஞானம் உள்ளதென்று அவர் கருத்துத் தெரிவித்தார் (வ. 8-10). அந்த நடைமுறைப் பயன்பாட்டை கர்த்தர், வாழ்வின் எல்லா வட்டாரங்களுக்கும் ஏற்படுத்த நோக்கங் கொண்டிருந்தபடியால், இது "ஒரு உவமை" என்று அழைக்கப்பட்டது (வ. 7): ''தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்றார் (வ. 11; லூக். 18:14; மத். 23:12 ஆகிய வசனங்களைக் காணவும்).*

***உண்மையிலேயே உபசரிப்புள்ளவர்களாக இருங்கள் (14:12-14)***

*கிறிஸ்து தமக்கு விருந்தளித்தவரை நோக்கித் திரும்பி, விருந்தளித்தல் என்ற தயவைத் திரும்பிச் செலுத்தக்கூடிய மற்றும் அநேகமாக அவ்வாறு திரும்பிச் செலுத்தப்போகின்ற விருந்தினர்களை அழைப்பதில் எவ்வித நல்லறமும் இல்லை என்று அவரிடம் கூறினார் (வ. 12). அந்த மனிதரிடம்*

*அவர், "நீ விருந்துபண்ணும்போது, ஏழைகளையும் ஊனரையும் சப்பாணி களையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானா யிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள்" (வ. 13, 14அ).*[11] இந்த வார்த்தைகளுடன் கர்த்தர் தமக்கு விருந்தளித்தவரை மட்டுமின்றி, நம்மில் நமது நண்பர்கள் மற்றும் நமக்கு "இணையானவர்கள்" என்று நாம் கருதுகின்றவர்களுக்கு மட்டும் "உபசரிப்பு" செய்பவர்களையும் சுட்டிக் காண்பித்தார் (மத். 5:46, 47; லூக். 6:32, 33).

**உண்மையிலேயே கீழ்ப்படிதலுள்ளவர்களாக இருங்கள் (14:15-24)**

உண்மையான உபசரிப்பானது "நீதிமான்களின் உயிர்த்தெழுதலில்"[12] பதில்செய்யப்படும் என்று இயேசு கூறினார் (வ. 14ஆ). விருந்தினர்களில் ஒருவர், அவர் [இயேசு] மேசியாத்துவ ராஜ்யத்தின்[13] வருகையைப் பற்றிக் குறிப்பிட்டதாக நினைத்துக் கொண்டு, "தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம் பண்ணுகிறவன் பாக்கியவான்!" என்று வியந்து சொன்னார் (வ. 15). இதற்குக் கிறிஸ்து, பெரிய விருந்து பற்றிய உவமையைக் கொண்டு பதிலுரைத்தார்.[14] அந்த விருந்திற்கு அழைக்கப்பட்டவர்கள் அதில் கலந்துகொள்ளாமல் இருப்பதற்குச் சாக்குப்போக்குகளைக் கூறினார்கள் (வ. 16-21). அதனால் கோபம் கொண்ட உபசரிப்பாளர், சிரமத்தில் இருக்கும் மக்கள்[15] வந்து தம்முடன் உண்ணும்படிக்குச் சொல்லியனுப்பி னார் (வ. 21-23; வ. 13உடன் ஒப்பிடவும்).

இந்த உவமையில் இருந்து பல பாடங்களைத் தரவழைக்க முடியும், ஆனால் இதைக் கூறுவதற்குக் கர்த்தர் கொண்டிருந்த அடிப்படை நோக்கமானது வசனம் 24ல் காணப்படுகிறது: அப்பொழுது எஜமான் ஊழியக்காரனை நோக்கி: "அழைக்கப்பட்டிருந்த அந்த மனுஷரில் ஒருவனாகிலும் என் விருந்தை ருசிபார்ப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றான். சந்தர்ப்பப் பொருளில் இது, "தேவனுடைய ராஜ்யத்தில் நீங்கள் உண்ணப்போவதாக நினைத்துக் கொண்டிருக்கின்ற உங்களில் பலர் அவ்வாறு உண்ணமாட்டீர்கள்!" என்று அர்த்தப்படுகிறது. அவர்கள் தேவனுடைய அழைப்பை ஏற்க மறுத்துவிட்டார்கள். குறிப்பாக, அவர்கள் தேவனுடைய குமாரனின் ராஜ்யத்தில் அங்கம் வகிக்கும்படியான அவரது அழைப்புக்குத் தங்கள் காதுகளை மூடிக்கொண்டார்கள். அவர்கள் இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்கள்.

இந்த உவமையில் நம் எல்லாருக்கும் ஒரு பாடம் உள்ளது: கர்த்தர் உங்களை அழைக்கும்போது (மத். 11:28), சாக்குப்போக்கு எதுவும் சொல்லாமல், அவரது அன்பிற்கு உடனடியாகப் பதில்செயலாற்றுங்கள். பின்பு, அதன் பின்பு மட்டுமே, நீங்கள் அவரது ஆவிக்குரிய விருந்தை மகிழ்வுடன் அனுபவிப்பதற்கான நம்பிக்கையைக் கொண்டிருக்க முடியும் (வெளி. 3:20ஐக் காணவும்).

## வீடுகளை எவ்வாறு கட்டுவது மற்றும் யுத்தங்களை எவ்வாறு செய்வது என்பது பற்றி எனக்குக் கதைகளைச் சொல்லுங்கள் (லூக். 14:25-35)

*இயேசுவின் கலிலேய ஊழியத்தின் முற்பகுதியில் திரளான மக்கள் அவரைப் பின்பற்றியிருந்தனர் (மத். 4:25). பெரேயாவில் "பின்பு அநேக ஜனங்கள் அவரோடே கூடப் பிரயாணமாய்ப் போ[னார்கள்]" (லூக். 14:25). மேசியாத்துவ உணர்வெழுச்சியானது தொடர்ந்து கட்டியெழுப்பப் பட்டது.[16] இந்த ஊக்கம் நிறைந்த ஆனால், கர்த்தரின் சீஷனாயிருப்பதன் விலையை எண்ணுவதில் நிலையற்று இருந்த கும்பலுக்கு வலியுறுத்திக் கூறுவதின் அவசியத்தை அவர் கண்டார் (வ. 26, 27).[17]*

*''விலையை எண்ணுதல்'' பற்றி அவர் இரண்டு விவரிப்புகளைக் கொடுத்தார்: ஒரு கட்டிடத்தைக் கட்ட தொடங்குமுன்பு அதன் செலவைக் கணக்கிடுதலின் அவசியம் (வ. 28-30) மற்றும் யுத்தத்திற்குச் செல்லுவதற்கு முன்பு அதன் விளைவு பற்றி ஆலோசித்தலின் அவசியம்[18] (வ. 31, 32). பின்பு அவர் சீஷத்துவத்தின் விலையைப் பற்றி மீண்டும் வலியுறுத்தினார் (வ. 33),[19] இத்துடன் அவர் முன்பு பயன்படுத்தியிருந்த ''உப்பு'' என்பதன் விவரிப்பையும் கூடுதலாகக் கூறினார். அவரைப் பின்பற்றுதல் அவர்களுக்கு நல்லதாகவே இருந்தது, ஆனால் அவர்கள், அவசியமான தியாகங்களைச் செய்வதற்கு மனவிருப்பமின்றி இருந்தால், அவர்கள் தனது சாரத்தை இழந்துபோன உப்பைப் போல் இருப்பார்கள் - அது மதிப்பற்றது என்பதை விட மோசமானதாகி விடும் (வ. 34, 35; மத். 5:13; மாற். 9:50 ஆகிய வசனங் களைக் காணவும்).*

## காணாமற்போன ஆடுகளையும் காசுகளையும் மற்றும் பையன்களையும் எவ்வாறு கண்டுபிடிப்பது என்பது பற்றி எனக்குக் கதைகளைச் சொல்லுங்கள் (லூக். 15:1-32)

*இயேசுவின் உரையைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களின் மத்தியில் "ஆயக்காரரும் பாவிகளும்" இருந்தார்கள் (வ. 1; லூக். 7:34ஐக் காணவும்). எல்லாரும் பாவிகளாய் இருப்பதால் (ரோமர் 3:23), "பாவிகள்" என்ற வார்த்தையானது நமக்கு அதிர்ச்சி தரலாம். ஆனால் இவ்வார்த்தையானது உலகத்தாரால், விசேஷமாகப் பரிசேயர்களால் பாவிகள் என்று கண்ணோக்கப்பட்டிருந்தவர்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது.*

*சமுதாயத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டிருந்த இவர்களிடமிருந்து கிறிஸ்து தம்மைத் தொலைவில் நிறுத்திக் கொள்ளவில்லை, ஆனால் அவர்களுடன் அப்பம் பிட்டுமிருந்தார் (மத். 9:10, 11ஐக் காணவும்).[20] இது, பரிசேயர்களும் வேதபாரகர்களும் "இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார்" என்று முறுமுறுக்கக் காரணமாயிற்று (லூக். 15:2). கடின இருதயங்கொண்ட அவர்களின் முறையீடு இயேசுவால்*

*கூறப்பட்ட நன்கு அறிந்த உவமைகளைத் தூண்டிற்று: காணாமற்போன பொருட்களைப் பற்றிய மூன்று கதைகள்.*

***காணாமற்போய் கண்டுபிடிக்கப்பட்டது (15:1-24)***

*கிறிஸ்து அடுத்ததாகக் கூறிய கதையானது, ஒரு ஆட்டைத் தொலைத்து விட்டு, பின்பு அதைக் கண்டுபிடித்தபோது அகம் மகிழ்ந்த ஒரு மேய்ப்பனைப் பற்றியதாக இருந்தது (வசனங்கள் 3-6).[21] அவர், "அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்"[22] என்று கூறினார் (வ. 7). அவர், ஒரு பெண் தனது காசு ஒன்றைத் தொலைத்து விட்டு, பின்பு அதைக் கண்டு பிடித்தபோது அதைக் கொண்டாடியது பற்றிக் கூறினார் (வ. 8, 9).[23] "அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார் (வ. 10). பின்பு அவர், "ஊதாரி[24] மகன்" பற்றிய உவமையைக் கூறினார். அன்பார்ந்த இந்தக் கதையைப் பற்றி, ஜான் கார்ட்டர் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *பாவத்தினால் சேதமுற்ற பல்லாயிரக்கணக்கானவர்களின் வாழ்வு அவர்களைப் பெரும்வருத்தத்தின் ஓரத்திற்குக்கொண்டு வந்திருக்கையில், அவர்கள் தேவனுடைய இரக்கத்திற்குத் தங்களை ஒப்புவிக்க இது [ஊதாரி மகன் உவமை] அவர்களை ஏவியிருக்கிறது; அவ்வாறு செய்ததில் அவர்கள் பாவமன்னிப்பையும் தெய்வீக ஏற்றுக்கொள்ளுதலையும் உணர்ந்து அறிந்ததுடன், வெற்றிகரமாக வாழ்வதற்கு வல்லமையையும் கண்டார்கள்.[25]*

*கடைசியில் ஊதாரிமகன் இல்லம் திரும்பியபோது, மாபெரும் அகமகிழ்ச்சி உண்டாயிற்று (வ. 24).*

***எரிச்சலுடன் இழந்துபோகுதல் (15:25-32)***

*ஊதாரிமகனின் உவமையைக் கூறுவதில், நாம் அவன் வீடு திரும்பிய போது நடந்த கொண்டாட்டத்துடன் பெரும்பாலும் முடிக்கின்றோம்; அது இந்தக் கதைக்கு இயல்பான ஒரு உச்சக்காட்சியைத் தருகின்றது. ஆயினும் இயேசு இதை அத்துடன் முடிக்கவில்லை. தந்தையின் அகமகிழ்ச்சியை மூத்த சகோதரரின் வெறுப்புணர்வுடன் நேரெதிராக ஒப்பிடுதலே இந்த உவமையின் உண்மையான கருத்தாக இருந்தது (வ. 25-30)[26]. மூத்த சகோதரன் பரிசேயர்களை - மற்றும் இழந்துபோகப்பட்டவர்களைக் குறித்து அக்கறையெதுவுமின்றி மற்றும் அவர்கள் கர்த்தரிடம் திரும்பும் போது மெய்சிலிர்க்காது இருக்கும் எவரொருவரையும் - பிரதிநிதித்துவப் படுத்தினான். தந்தை தனது மூத்த மகனுக்குக் கூறிய வார்த்தைகளில் நாம் கொண்டிருக்க வேண்டிய எண்ணப்போக்கு காணப்படுகிறது: விலையேறப் பெற்ற ஆத்துமாவான "இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்;*

*காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான்”; ஆனபடியினாலே, நாம் ‘‘சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டுமே’’ என்று சொன்னான் (வ. 32).*

## பணத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி எனக்கு ஒரு கதை சொல்லுங்கள் (லூக். 16:1-13)

***அநீதியான உக்கிராணத்துவம் (16:1-9)***

*இயேசு அடுத்ததாகத் தமது சீஷர்களிடம் திரும்பி (வ. 1) நேர்மையற்ற பணி மேலாளர் பற்றிய ஒரு உவமையை அவர்களுக்குக் கூறினார்.[27] மூலவேத வசனத்தில் “மேலாளர்” என்பதற்குப் பதிலாக “உக்கிராணக்காரர்” என்றுள்ளது. உக்கிராணக்காரர் என்பவர் இன்னொருவருக்குச் சொந்தமானவற்றைக் கவனித்துக் கொள்பவராக இருக்கின்றார் (லூக். 12:41-48; 1 கொரி. 4:2 ஆகியவற்றைக் காணவும்).*

*இந்த உக்கிராணக்காரர் பற்றி கிறிஸ்து கூறிய கதை, அவர் கூறியவற்றில் மிகவும் வழக்கத்திற்கு மாறான உவமைகளில் ஒன்றாக உள்ளது. மேலோட்டமாகக் காண்கையில், இது நேர்மையற்ற தன்மையுடன் இருப்பதைப் புகழ்வதுபோல் உள்ளது.[28] அந்தப் பணிமேலாளர் தம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட நிதிகளை தவறாகக் கையாண்டு (வ. 1) வேலையிலிருந்த நீக்கப்படவிருந்தார் (வ. 2).[29] அவர் உடனடியாகத் தம்மை வேலைக்கு அமர்த்தியவரிடம் கடன்பட்டிருந்தவர்களை அழைத்து, தாம் வேலையை விட்டு நீக்கப்படும்போது அவர்களின் நட்புறவைப் பெறுவதற்காக (வ. 4) அவர்கள் கடன்பட்டிருந்த தொகைகளைக் குறைத்தார் (வ. 5-7). விரைவிலேயே அவரது முன்னாள் எஜமானாக இருந்தவர் இம்மனிதரின் சாமர்த்தியத்தைக் கண்டு இவரை மெச்சிக் கொண்டார் (வ. 8அ).[30]*

*நேர்மையற்ற மற்றும் வறியதான இந்த உக்கிராணத்துவத்தை இயேசு பாராட்டினாரா? இல்லவே இல்லை (வ. 16:17ஐக் கவனியுங்கள்). அவர் ஏற்படுத்திய/உரைத்த கருத்தானது வசனம் 8ன் கடைசியில் உள்ளது: “ஒளியின் பிள்ளைகளைப் பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்.” இதை பின்வருமாறு வேறொரு வகையாகக் கூறலாம்: தேவபக்தியுள்ள மனிதர்கள் தேவபக்தியான இலக்குகளை நிறைவேற்றப் பணத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அறிந்திருப்பதைக் காட்டிலும் தேவபக்தியற்ற மனிதர்கள் தேவபக்தியற்ற நோக்கங்களுக்குப் பணத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அதிகமாய் அறிந்துள்ளனர்.*

*நேர்மையற்ற பணிமேலாளர் பணத்தைக் கொண்டு நண்பர்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தார். அதுபோலவே, ‘‘நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வாருண்டாகும்படி, அநீதியான உலகப்பொருளால்[31] உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்” என்று கிறிஸ்து கூறினார் (வ. 9). தேவையில் உள்ள மக்களுக்கு வேண்டியவற்றை அளித்தல் என்பதே உடமைகளைக் கொண்டு ‘‘நண்பர்களை*

ஏற்படுத்திக் கொள்ளும்” வழிமுறையாக உள்ளது. இயேசுவைப் பொறுத்த மட்டில், பிறருக்குக் கொடுத்தல் என்பது பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தலாகவும், பூமியில் நம்மால் உதவி செய்யப்பட்டவர்களால் இதயங்குளிர வரவேற்கப்படுவதை உறுதி செய்வதாகவும் உள்ளது. இங்குள்ள பாடமானது அடிப்படையில் லூக்கா 12:33ல் உள்ள பாடத்தைப் போன்றதாகவே உள்ளது: “உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சை கொடுங்கள்; … குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள்.”[32]

**நீதியான உக்கிராணத்துவம் (16:10-13)**

நல்ல உக்கிராணக்காரர்களாய், விசேஷமாக நமது பணத்தைப் பொறுத்தமட்டில் நல்ல உக்கிராணக்காரர்களாய் இருப்பது பற்றிய பொதுவான புத்திமதியைக்கொண்டு கிறிஸ்து இந்த உவமைக்கு மறுவலிவூட்டினார் (வ. 10-12). பணத்தை நமது எஜமானாகும்படி அனுமதிப்பதற்கு எதிராகவும் அவர் எச்சரிக்கை செய்தார் (வ. 13; மத். 6:24ஐக் காணவும்). அவர் இந்த உவமைக்கும் இதைத் தொடர்ந்த தம் போதனைக்கும் “பரிசேயர்களின் புளித்தமா பற்றி எச்சரிக்கையாயிருங்கள்” என்ற வார்த்தைகளைக் கொண்டு முகவுரையளித்திருக்க முடியும் (லூக். 12:1), ஏனெனில் “பரிசேயர்கள் பொருளாசைக்காரராயிருந்தார்கள்” (லூக். 16:14). அவர்கள், செல்வந்தராயிருத்தல் என்பது தேவனுடைய அங்கீகாரத்திற்கு வழக்கில்லாத நிரூபணமாக இருந்தது என்று நம்பியிருந்தார்கள்.

## “நரகத்தை”விட்டு வெளியே இருப்பது எப்படி என்பது பற்றி எனக்கு ஒரு கதை சொல்லுங்கள் (லூக். 16:14-31)

இயேசுவுக்கு பணம் என்பது உலகத்தில் மிகமுக்கியமான விஷயமாக இருந்ததில்லை என்பது தெளிவு. “இவைகளையெல்லாம்” பரிசேயர்கள் கேட்டபோது, அவர்கள் அவரைப் பரியாசம்பண்ணினார்கள் (வ. 14).[33] NASB வேதாகமம் அவர்கள் அவரை “ஏளனம்” செய்தார்கள் என்று நமக்குக் கூறுகிறது. NIV வேதாகமம் அவர்கள் “இகழ்ந்து சிரித்தனர்” என்று கூறுகிறது. அவர்கள் இயேசுவை மக்களின் கண்களில் சிறுமைப் படுத்தலாம் என்று நம்பினார்கள்.

**வெறுப்பு உணர்வுடன் இருந்த செல்வந்தர்கள் (16:15-18)**

கிறிஸ்து பரிசேயர்களைக் கண்டித்து பதில் அளித்தார்.[34]

- அவர்கள் தங்களை மனிதர்களின் பார்வைக்கு நீதிமான்களாக்கிக் கொண்டதற்காக, அவர்களை அவர் கடிந்துகொண்டார் (வ. 15).
- அவர்கள் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களையும் முறைமைகளையும் கொண்டு ராஜ்யத்திற்குள் தங்கள் வழியை “நிர்ப்பந்திக்க” முயற்சி செய்ததால், அவர்களை அவர் கடிந்து

*கொண்டார் (வ. 16).*[35]

- *அவர்கள் அழிக்கப்பட இயலாத தேவ வசனத்தைக் காட்டிலும் நிலைத்திராத தங்களின் மனிதப் பாரம்பரியத்தைக் குறித்து அதிக அக்கறையாக இருந்ததால், அவர்களை அவர் கடிந்துகொண்டார் (வ. 17, 18).*[36]

***பாதாளத்தில் ஒரு பணக்கார மனிதர் (16:19-31)***

*கிறிஸ்து தமது கடிந்துகொள்ளுதலைத் தொடர்ந்து, இன்னொரு கதையைச் சொன்னார். நேர்மையற்ற உக்கிராணக்காரர் பற்றிய அவரது உவமையானது பணத்தை நேசிப்பவர்களின் மனதை உறுத்தியிருக்கு மென்றால், அவர்கள் இந்த விவரிப்பால் இருமடங்கு கதிகலங்கியிருக்க வேண்டும். இது இழந்துபோகப்பட்டிருந்த ஒரு பணக்கார மனிதரைப் பற்றியதாக இருந்தது.*

*லூக்கா 16:19-31 வசனங்கள் பொதுவாக "பணக்கார மனிதர்*[37] *மற்றும் லாசரு பற்றிய உவமை" என்று அழைக்கப்படுகிறது. இது உக்கிராணத்துவப் பரீட்சையில் தவறிய ஒரு பணக்கார மனிதரின் கதையாக உள்ளது. இவர், லாசரு என்ற பெயர்கொண்ட ஒரு பிச்சைக்காரருக்கு உதவி செய்வதற்குத் தனக்குக் கிடைத்த வாய்ப்பை அனுகூலப்படுத்திக் கொள்ளாதிருந்தார்.*[38] *அந்தப் பிச்சைக்காரர் இறந்தபொழுது, அவர் தூதர்களால் "ஆபிரகாமுடைய மடியிலே" கொண்டுபோய் விடப்பட்டார் (வ. 22); ஆனால் அந்தப் பணக்கார மனிதர் இறந்தபோது, அவர் தாம் "வேதனைப்படுகிறதை" கண்டார் (வ. 23).*

*அந்தப் பணக்கார மனிதர், தமது ஐந்து சகோதரர்களை எச்சரிப்பதற் காக லாசரு பூமிக்குத் திரும்ப அனுப்பப்பட வேண்டும் என்று கெஞ்சினார், ஆனால் அவருக்கு, "அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு ..."; "அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள்" என்று கூறப்பட்டது (வ. 29, 31). அந்த வார்த்தைகள் பரிசேயர்களுக்கு விசேஷித்த நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருந்தன: அவர்கள் இயேசுவை பற்றிச் சாட்சியளித்த மோசே மற்றும் தீர்க்கதரிசிகளின் எழுத்துக்களைக் கொண்டிருந்தனர் (லூக். 24:44), ஆனால் அவர்கள், அவற்றைக் கவனிக்க மறுத்துவிட்டனர். இவ்விதமாக அவர்கள், இயேசு இறந்தவர்களை உயிரோடு எழுப்பியிருந்தும் இணங்காதிருந்தார்கள் (லூக். 7:11-17; 8:41-56; யோவா. 11:1-53; 12:9-11யும் காணவும்). உண்மையில், அவர்கள் பிற்பாடு இயேசு தாமே மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்ட போதும் அவருக்கு இணங்க மாட்டார்கள் (மத். 28:11-15; அப். 4:1-22).*

*லூக்கா 16:19-31ன் மறைவான கருத்தை விரும்பாத சிலர்,*[39] *இந்த எடுத்துரைப்பு ஒரு தேவதைக் கதையை விடச் சற்றே அதிகமானது என்று போதிக்க "உவமை" என்ற வார்த்தையைப் பிடித்துக் கொண்டுள்ளார்கள். பின்வரும் உண்மைகளை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்:*

*(1) வேதாகமம் இந்தக் கதையை உவமை என்று அழைப்பதில்லை. இது ஒரு உவமையாக இருந்தால், இது ஒன்று மட்டுமே பிரதான பாத்திரத்தின்*

பெயரைக் கொடுப்பதாக உள்ளது (லாசரு). மேலும் இது ஒரு உவமையாக இருந்தால், இயேசுவின் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான, பொதுவான அன்றாட சூழ்நிலைகளின் அடிப்படையில் அமைந்திராத ஒரு சில உவமைகளில் இதுவும் ஒன்றாக உள்ளது. "உவமை" என்ற வார்த்தை யானது சுவிசேஷ விவரங்களில் தளர்வாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை நாம் வலியுறுத்தி இருக்கின்றோமே; இது சிலவேளைகளில் "விவரிப்பு" என்பதை விட அதிகமாக அர்த்தப்படுகிறது (இந்தப் பாடத்தில் லூக். 14:7-10ஐக் காணவும்). ஆகையால், "உவமை" என்ற இந்தக் குறிப்புப் பெயரானது கர்த்தருடையதாயிராமல் நம்முடையதாயிருக்கிறது என்பதை நாம் நினைவில் வைத்திருக்கும் வரையில், பணக்கார மனிதர் மற்றும் லாசரு ஆகியோரின் கதையை "உவமை" என்று அழைப்பதில் எந்தத் தீங்கும் இருப்பதில்லை.

(2) இந்தக் கதையை நாம் "உவமை" என்று அழைத்தாலும், இதை நாம் "கற்பனைக் கதை" என்று பெயரிடுவதாக அர்த்தப்படுவதில்லை. மெக்கார்வீ அவர்கள், "ஆனால் இயேசுவின் உவமைகள் கற்பனையான சூழ்நிலைகளை ஒருக்காலும் அறிமுகப்படுத்தியதில்லை, மற்றும் அவைகள் எவ்விடத்திலும் இயற்கையின் முறைமையையும் ஓட்டத்தையும் மீறியதில்லை என்பது கவனிக்கப்பட வேண்டும்" என்று விளக்கம் அளித்தார்.[40] லூக்கா 16:19-31ன் காட்சிகள் மரணத்திற்குப் பின்பு ஆத்துமாக்களின் நிலையை மிகச் சரியாகச் சித்தரிக்கின்றன என்பதை சந்தேகிக்கக் காரணம் எதுவும் இல்லை: இழந்துபோகப்பட்டவர்களின் சபிக்கப்பட்ட நிலை மற்றும் இரட்சிக்கப் பட்டவர்களின் ஆசீர்வதிக்கப்பட்ட நிலை. முன்னமே இருக்கின்றவர் என்ற வகையில் (யோவா. 1:1, 2, 14), "இயேசு ஒருவர் மட்டுமே, மரணத்திற்குப் பின்பு மக்களின் அனுபவம் என்ன என்பதை விவரிக்கக் கூடியவராகப் பூமியில் வாழ்ந்த ஒரே நபராக இருக்கின்றார்."[41]

## முடிவுரை

இந்தப் பாடங்களுக்கு நாம் தனிப்பட்ட நடைமுறைப் பயன்பாடு களை ஏற்படுத்தினால், அவைகள் நமது வாழ்வின் நடைமுறை வழியில் செயல்தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். எடுத்துக்காட்டாக, நாம் இதற்கு முன் நமது வீட்டிற்கு அழைக்கலாம் என்று ஒருக்காலும் கருதியிராத மக்களை, ஒருவேளை பதிலுக்குச் செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படாத வர்களையும் கூட நமது வீடுகளுக்கு அழைக்கலாம். நம்மையே நாம், "இயேசுவைப் போல நான் பாவிகளுக்குச் சிநேகிதனாக இருக்கின்றேனா?" என்று கேட்டுக் கொள்ளலாம். ஒருவேளை நாம் இந்த வாரத்தில் பழக்கம் ஏற்படுத்திக் கொள்வதற்காக ஒரு சிலரைத் தேர்ந்து கொள்ளலாம்.[42] வேறொன்றும் இல்லையென்றாலும், அவமதிக்கப்பட்ட அழைப்பு பற்றிய உவமையானது (லூக். 14:16-24), நம்மையே நாம், "கர்த்தருடைய அழைப்பை நான் ஏற்றுள்ளேனா?" என்று கேட்கக் காரணமாக வேண்டும். பணக்கார மனிதர் மற்றும் லாசரு ஆகியோரின் உவமையானது "நான் மரிக்கத் தயாராக இருக்கிறேனா?" என்ற ஆத்தும ஆராய்வுக் கேள்வியை நமக்குள் தூண்ட வேண்டும்.

*குறிப்புகள்*

[1]*"உவமை" என்ற வார்த்தையின் அர்த்தத்தையும் இயேசு ஏன் உவமைகளைப் பயன்படுத்தினார் என்பதையும் நீங்கள் மறுகண்ணோட்டமிட விரும்பலாம்.* [2]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 175. [3]*உவமைகளின் எண்ணிக்கையானது, உவமை என்பதைப் பற்றி ஒருவர் தரும் விளக்கத்தைச் சார்ந்துள்ளபடியால், இந்தக் காலவேளையின்போது பேசப்பட்ட உவமைகளின் மிகச் சரியான எண்ணிக்கையில், கல்வியாளர்கள் மாறுபடுகின்றனர். மிகச் சரியான எண்ணிக்கை என்பது முக்கியமற்றதாக உள்ளது.* [4]*வசனம் 1ன்படி இயேசு, பரிசேயரில் தலைவரான ஒருவரின் வீட்டில் உணவு உண்ணச் சென்றார். "பரிசேயர்கள் ஒழுங்கமைக்கப்படாத குழுவாக இருந்தார்கள், எனவே அவர்களின் அதிகாரிகள் அல்லது தலைவர்கள் என்பவர்கள் அலுவலக ரீதியானவர்களாக இல்லாமல், செல்வாக்கினால் அவ்வாறானவர்களாய் இருந்தனர்"* (J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* [Cincinnati: Standard Publishing Co., 1914], 492; emphasis his). [5]*இயேசு இந்த அழைப்புக்களை ஏன் ஏற்றுக்கொண்டார் என்பது பற்றிய ஒரு கலந்துரையாடலை, "ஒரு மேய்ப்பனின் அக்கறை" என்ற பாடத்தில் "அவரது விரோதிகளைப் பற்றிய அக்கறை" என்ற உட்தலைப்பில் காணவும்.* [6]"Dropsy" *என்ற ஆங்கில வார்த்தையானது hudrops என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து தரவழைக்கப்படுகிறது, இது ''தண்ணீர்'' என்பதற்கான கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது (இதிலிருந்தே நாம் ஆங்கிலத்தில்* "hydro" *என்ற முன்னொட்டுச் சொற்பகுதியைப் பெறுகின்றோம்).* [7]*தண்ணீர் தக்கவைக்கப்படுதல் என்பது சிறுநீரகங்கள் சரியாக வேலை செய்யாததின் அடையாளமாக இருக்கவும் முடியும்* (Charles B. Clayman, medical ed., *The American Medical Association Home Medical Encyclopedia,* vol. 1 [New York: Random House, 1989], s.v. "dropsy"). [8]*பழங்காலக் கைப்பிரதிகள் சிலவற்றில் "மகன்" என்றுள்ளது, மற்றும் சிலவற்றில் ''கழுதை'' என்றுள்ளது (KJVயில் காணவும்).* NASB *மொழிபெயர்ப்பாளர்கள் "மகன்" என்பதை விரும்பித் தேர்ந்தெடுக்கின்றார்கள்.* [9]*லூக்கா 14:5ல் "துரவு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை "குழி" என்று அர்த்தப்பட முடியும் (KJVயில் காணவும்), ஆனால் ''கிணறு'' அல்லது ''நீர்த்தொட்டி'' என்பதே அதிகம் பொதுவான அர்த்தமாக உள்ளது. (இது யாக்கோபுடைய கிணற்றைக் குறிப்பிடுவதற்கு யோவா. 4:11, 12ல் பயன்படுத்தப் பட்ட வார்த்தையாக உள்ளது.)* [10]*நான் வாழும் இடத்தில் நாங்கள், "அவர்கள் எல்லாரும் விருந்தில் மேஜையின் தலைப்பாகத்தில் இருக்க விரும்பினார்கள்" என்று கூறுவதுண்டு. இந்த விளக்கத்தை உங்கள் பகுதியின் பழக்கவழக்கத்திற்கு ஏற்றாற்போல் தழுவிக்கொள்ளவும். ["தலைப் பந்தியில் முதல் வரிசையில் உட்கார விரும்பினார்" என்று கூறலாம்.]*

[11]*நமது வீடுகளுக்கு நமது நண்பர்களை அழைப்பதில் எந்தத் தவறும் இல்லை. மார்த்தாள் மரியாள் போன்ற நண்பர்களின் உபசரிப்பை இயேசு மகிழ்வுடன் அனுபவித்தார் (லூக். 10:38). நமது உபசரிப்பு நமக்குப் பதிலுக்குச் செய்பவர்களுடன் மட்டுப்பட்டு விடக்கூடாது என்றே இது அர்த்தப்படுகிறது.* [12]*''நீதிமான்களின் உயிர்த்தெழுதல்'' என்ற சொற்றொடரைச் சிலர், இரண்டு உயிர்த்தெழுதல்கள் இருக்கும் என்று போதிக்க எடுத்துக் கொள்கின்றனர்: நீதிமான்களின் உயிர்த்தெழுதல், மற்றும் பிந்திய ஒரு காலத்தில், அநீதியான மக்களின் உயிர்த்தெழுதல். இருப்பினும், வேதாகமம், நல்லவர்கள் தீயவர்கள் ஆகிய இரு*

*சாராருக்கும் பொதுவான ஒரே உயிர்த்தெழுதல் இருக்கும் என்றுதான் போதிக்கிறது (யோவா. 5:28, 29). லூக். 14:14ல் இயேசு, உயிர்த்தெழுதலில் நீதிமான்கள் மாத்திரம் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று போதித்தார். [13]வரவிருந்த மேசியாத்துவ ராஜ்யத்தைப் பற்றி யூதர்கள் பல்வேறு வகையான கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள். [14]இந்த உவமையானது, "அவமதிக்கப்பட்ட அழைப்பின் உவமை" என்பது உட்படப் பல பெயர்களைக் கொண்டு குறிப்பிடப்பட்டுள்ளது. [15]லூக்கா 14:23ல் உள்ள "வருந்தி" என்ற வார்த்தை உடல்ரீதியான நிர்ப்பந்தத்தைக் குறிப்பதில்லை, ஆனால் பலமாக நயந்து பேசுதலாக உள்ளது. வறுமையில் வாடும் மக்கள், செல்வமும் அதிகார நிறைவும் உள்ள ஒரு மனிதரின் இல்லத்திற்கு வரத் தயங்குவார்கள். [16]இந்த உணர்வெழுச்சியானது, இயேசுவின் மரணத்திற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பு அவர் எருசலேமுக்குள் வெற்றிப் பிரவேசமாக உட்சென்றபோது உச்சக் கட்டத்தை அடைந்திருக்கும் (மத். 21:1-11). [17]லூக்கா 14:26ஐ மத்தேயு 10:37உடன் ஒப்பிடவும். லூக்கா 14:26 பற்றிய ஒரு கலந்துரையாடலை "கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் காணவும். லூக்கா 14:27ஐ மத்தேயு 10:38; 16:24; மாற்கு 8:34; லூக்கா 9:23உடன் ஒப்பிடவும். [18]இந்த விவரிப்பில் உள்ள "எதிரி" யார் என்பது பற்றி உங்களுக்குள்ளே கவலைப்பட்டுக்கொண்டு இருக்காதீர்கள். உவமை/விவரிப்பில் உள்ள ஒவ்வொரு விஷயமும் "அர்த்தம் சிலதை"க் கொண்டிருக்க வேண்டும் என்று அவசியமில்லை. [19]இதை லூக்கா 12:33உடன் ஒப்பிடவும். லூக்கா 12:33 பற்றிய ஒரு சுருக்கமான விளக்கத்திற்கு இந்தப் பாடத்தில் காணவும். இயேசுவுடன் முழுநேரப் பயணம் செல்ல விரும்புகின்றவர்களுக்கு உடைமைகளை விட்டுவிடுதல் என்பது அவரது அறைகூவலின் ஒரு பகுதியாக இருந்தது. அத்துடன், பிற்பாடு கிறிஸ்தவர்களுக்கு வந்த உபத்திரவத்தின் வெளிச்சத்தில் (அப். 8:1) காணுகையில், அவரைப் பின்பற்றிய எவரொருவரும் தமது உடைமைகள் தம்மிடமிருந்து எடுபட்டுப்போவதை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டியதாயிற்று. [20]சிலர், உலகப்பிரகாரமான நடவடிக்கைகளில் தங்களின் பங்கேற்பை நியாயப் படுத்துவதற்கு, லூக்கா 15:1, 2 வசனங்களைப் பயன்படுத்த முயற்சி செய்துள்ளனர். இயேசுவின் நோக்கத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள்: அவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பதற்காக அவர்களுடன் அவர் உணவு உண்டார் (லூக். 5:30-32). இயேசுவின் பங்கேற்பினுடைய விரிவளவை ஆழ்ந்து சிந்தியுங்கள்: அவர்களுடன் அவர் உணவு உண்டார், ஆனால் அவர்களின் பாவம் நிறைந்த செயல்களில் அவர் ஈடுபடவில்லை.*

*[21]காணாமற்போன ஆடு பற்றிய ஒரு விவரிப்பை இதற்கு முன்பு மாறுபட்ட ஒரு நடைமுறைப் பயன்பாட்டுடன் இயேசு பயன்படுத்தியிருந்தார் (மத். 18:12-14). [22]எவரொருவரும் உண்மையிலேயே நீதிமானாக இருப்பதில்லையாதலால் (ரோமர் 3:10) மற்றும் எல்லாருமே மனந்திரும்ப வேண்டியது அவசியமாக இருப்பதால் (அப். 17:30), லூக்கா 15:7ன் கடைசிப் பகுதியானது முரண்பாட்டைக் கொண்டுள்ளதாகத் தோன்றுகிறது: பரிசேயர்கள் தங்களை, மனந்திரும்பத் தேவையற்ற நீதியுள்ள தனிநபர்கள் என்று கருதினார்கள் (லூக். 18:9ஐக் காணவும்). [23]காணாமற்போன காசு திராக்மா என்பதாகும், இது ஒரு நாள் கூலியான ஒரு தினேரியத்திற்குச் சமமானதாக இருந்தது. [24]நம்மில் பலர் "ஊதாரி" என்ற வார்த்தையை "உண்மையற்றவர்" அல்லது "பாவம் நிறைந்தவர்" என்பதுபோன்ற பொருள் தரக்கூடியதாக நமது சிந்தையில் வந்துள்ளவற்றைப் பற்றி அதிகமாகக் கேள்விப்பட்டு மற்றும் அவற்றைப் பயன் படுத்தி இருக்கின்றோம். இந்த சொற்றொடர் உண்மையில், "வீணாக்குதல் அல்லது ஆடம்பரமாய்ச் செலவு செய்தல்" என்றே அர்த்தப்படுகிறது. [25]*John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 216. *[26]உவமையின் இந்தப் பகுதியின்மீதான குறிப்புகளுக்கு அடுத்துவரும் "வரலாற்றின் எஞ்சிய பகுதி"*

என்ற பிரசங்கத்தில் காணவும். [27]NASB மற்றும் பல நவீன மொழிபெயர்ப்புகளில் "manager" என்றுள்ளது. The Contemporary English Version and New Century Version என்ற வேதாகம மொழிபெயர்ப்புகளில் "manager to take care of his business" என்றுள்ளது. இந்த உவமையின் குறிப்புப் பெயர்களில் "the parable of the unrighteous manager," "the parable of the shrewd manager" மற்றும் "the parable of the unjust steward" என்பவைகளும் உள்ளன (லூக். 16:8ஐக் காணவும்). [28]கிறிஸ்துவால் விவரிக்கப்பட்ட நேர்மையற்ற மனிதனை, அவரது உரையைக் கேட்டுக்கொண்டிருந்த ஆயக்காரர்களும் பாவிகளும் அடையாளம் கண்டுகொள்ள முடிந்திருக்கும் என்பதால் கிறிஸ்து இந்த விவரிப்பைப் பயன்படுத்தினார் என்று ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [29]இந்த மனிதர் செய்த வேலையானது பொதுவாக அடிமைகளால் செய்யப்பட்டது, ஆனால் இந்த உக்கிராணக்காரன் பணிநீக்கம் செய்யப்பட்டான் என்ற உண்மையானது, இவன் அடிமையல்ல ஆனால் ஒரு சுயாதீனனாக இருந்தான் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. [30]நேர்மையற்ற உக்கிராணக்காரன் "ஞானமாய்ச் செய்தான்" என்று KJV வேதாகமம் கூறுகிறது. இது மிகச் சரியான மொழிபெயர்ப்பாக உள்ளது, ஆனால் இந்த மனிதனின் "ஞானம்" என்பது இந்த உலகத்தின் ஞானம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் (1 கொரி. 1:20; யாக். 3:15ஐக் காணவும்). "விவேகம்" என்பது கருத்தை வெளிப்படுத்துகிறது. பணக்கார மனிதனின் வார்த்தைகள் புத்திசாலித்தனமான அயோக்கியனை அவனது உலக சிந்தைக்காக முறுமுறுத்தலுடன் பாராட்டுதலாக இருந்தன.

[31]பணம் என்பது தனக்குள்ளாகவே நல்லதாகவோ அல்லது மோசமானதாகவோ இருப்பதில்லை. பணத்தின்மீதான விருப்பமானது மக்கள் பலருக்குள் அநீதியான தன்மையை உண்டாக்குகிற காரணத்தினால் (1 தீமோ. 6:10), இது லூக்கா 16:9ல் "அநீதியான உலகப் பொருள்" என்று அழைக்கப்பட்டுள்ளது. [32]லூக்கா 12:33க்கான விளக்கங்களைக் "புதிய மற்றும் பழைய விஷயங்கள்" என்ற பாடத்தில் காணவும். [33]அவரை அவர்கள் பெருந்தொல்லைப் படுத்தினார்கள் என்று அமெரிக்காவில் நாங்கள் கூறுவதுண்டு. லூக்கா 23:35உடன் ஒப்பிடவும். [34]பின்வருபவை லூக்கா 16:15-18ல் உள்ள கிறிஸ்துவின் வார்த்தைகளின் தொகுப்புரையாக உள்ளது, இது வேதாகமத்தின் மற்ற இடங்களில் பரிசேயர்களைப் பற்றி அது போதிப்பதை எடுத்துரைக்கிறது. [35]மல்கியாவின் காலத்திற்குப் பின்பு நானூறு ஆண்டுகளாக இருந்த "தீர்க்கதரிசன அமைதியை" யோவான் ஸ்நானன் உடைத்தெறிந்தார். யோவானின் காலம் தொடங்கி நற்செய்தியானது ("சுவிசேஷம்") "ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், (இயேசுவை விசுவாசித்துப் பின்பற்றுவதினால்) ராஜ்யத்திற்குள் வருவதற்கான தேவனுடைய வழியை ஏற்றுக்கொள்ளுவதற்குப் பதிலாகப் பரிசேயர்கள் தங்கள் சொந்த சட்டங்களையும் முறைமைகளையும் பயன்படுத்தி தங்கள் வழியை "நிர்ப்பந்திக்க" முயற்சி செய்து கொண்டிருந்தனர். அது அப்போதும் உதவவில்லை, இப்போதும் செயலுக்கு உதவாது. [36]லூக்கா 16:17ஐ மத்தேயு 5:18உடனும், லூக்கா 16:18ஐ மாத்தேயு 5:31, 32உடனும் ஒப்பிட்டுப் பார்க்கவும். பெற்றோரைக் கவனித்தல் பற்றிய தேவனுடைய பிரமாணங்களைப் பரிசேயர்கள் தங்கள் பாரம்பரியங்களினால் (மத். 15:1-9) புறம்பே தள்ளியிருந்ததைப் போலவே, அவர்கள் தங்கள் பாரம்பரியங்களைக் கொண்டு திருமணம் பற்றிய தேவனுடைய பிரமாணத்தையும் புறம்பே தள்ளியிருந்தார்கள். திருமணம் மற்றும் மணமுறிவு என்ற பாடக் கருத்துக்களைப் பற்றி நாம் மத்தேயு 19:1-9ஐப் படிக்கும்போது இன்னும் விவரமாகக் காண்போம். [37]பணக்காரனான இம்மனிதன் பெரும்பாலும் "Dives" என்று அழைக்கப் படுகின்றான், ஆனால் அது அவனது பெயரல்ல. "Dives" என்பது "பணக்காரன்" என்பதற்கான இலத்தீன் வார்த்தையாக உள்ளது. இந்த உவமையில் லாசருவின்

*பெயர் குறிப்பிடப்படுகிறது, ஆனால் பணக்காரனின் பெயர் குறிப்பிடப்படுவ தில்லை.* [38]*இந்த "உவமை" பற்றி அதிகம் விரிவான ஒரு படிப்பிற்கு இந்த புத்தகத்தில் "நரகத்திலிருந்து ஒரு கடிதம்" என்ற பிரசங்கத்தில் காணவும்.* [39]*இது, மரித்தவர்கள் உணர்வுடன் இருக்கின்றார்கள் என்பதை விசுவாசிக்காதவர்களையும், மரணத்திற்குப் பின்பு தண்டனை உண்டு என்பதை விசுவாசிக்காதவர்களையும் உள்ளடக்குகிறது.* [40]McGarvey and Pendleton, 514.

[41]Carter, 221. [42]*இந்த எடுத்துரைப்பு ஒரு வகுப்பறையில் முன்வைக்கப்பட்டால், நீங்களும் உங்கள் மாணவர்களும் நண்பர்களாக்கிக் கொள்ளக்கூடிய பாவிகளுடன் எவ்வாறு தொடர்பு கொள்ளுவது என்பது பற்றிய ஒரு கலந்துரையாடலை வழிநடத்த நீங்கள் விரும்பலாம். பள்ளி செல்லும் வயதில் உள்ள பிள்ளையை உடையவர்களுக்கு, தங்கள் பிள்ளையுடன் வகுப்புக்குச் செல்லும் இன்னொரு பிள்ளையின் பெற்றோர்களுடன் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ளும்படியாக ஒரு ஆலோசனை கூறப்படுகிறது.*